# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.05/2025 நாள் : 25.01.2025

**புழலில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதானக் குழாய்களில் நீர் அளவீடு கருவிகளை (Electro Magnetic Flow Meter) பொருத்துவதற்காக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் 28.01.2025 அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை மண்டலம் 1, 2, 3, 4, 6, 7, 8 மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.**

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

புழலில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தின் பிரதானக் குழாய்களில் நீர் அளவீடு கருவிகளை (Electro Magnetic Flow Meter) பொருத்துவதற்காக பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் **28.01.2025 அன்று காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (10 மணி நேரம்)** மண்டலம் – 1 (திருவொற்றியூர்), மண்டலம் –2 (மணலி), மண்டலம் –3 (மாதவரம்), மண்டலம் –4 (தண்டையார்பேட்டை), மண்டலம் –6 (திரு.வி.க நகர்), மண்டலம் –7 (அம்பத்தூர்), மண்டலம் –8 (அண்ணாநகர்) மற்றும் ஆவடி மாநகராட்சி ஆகிய பகுதிகளுக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம்–1 (திருவொற்றியூர்) | தாழங்குப்பம், நெய்தல் நகர், ராமசாமி நகர், கத்திவாக்கம் |
| மண்டலம்–2 (மணலி) | மணலி நியூ டவுன், கொசப்பூர், MMDA மாத்தூர், சின்னசேக்காடு |
| மண்டலம்–3 (மாதவரம்) | புக்குராஜ் நகர், தணிகாசலம் நகர், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம் |

| | |
|---|---|
| மண்டலம்–4 (தண்டையார்பேட்டை) | வியசார்பாடி, படேல் நகர், கொருக்குப்பேட்டை |
| மண்டலம்–6 (திரு.வி.க நகர்) | கொளத்தூர், பேரவள்ளூர், பெரம்பூர், புளியந்தோப்பு |
| மண்டலம்–7 (அம்பத்தூர்) | கள்ளிக்குப்பம், கொரட்டூர், ஒரகடம், அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ரோடு, முகப்பேர் |
| மண்டலம்–8 (அண்ணாநகர்) | சிட்கோ நகர், அண்ணா நகர், ராஜமங்கலம் |
| ஆவடி மாநகராட்சி | நாகம்மை நகர், ஆவடி |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044–4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in